# யாழ்ப்பாணத்துத் தமிழ் மன்னன் செகராசசேகரன் கால இசைமரபு

முனைவர் கிருபாசக்தி கருணா

**அறிமுகம் :**

பண்பாட்டு அடிப்படையில் யாழ்ப்பாணத்திற்கு 2500 ஆண்டுகளுக்குக் குறையாத தொன்மையான பாரம்பரிய வரலாறு உண்டு. இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணம் பண்டு தொட்டுத் தனி ஒரு பிராந்தியமாக வரலாற்று மூலங்களில் அடையாளப்படுத்தப்பட்டு வந்துள்ளது. இங்கு இசையை இரசிக்கும் மன்னர்களும் மக்களும் வாழ்ந்திருக்கிறார்கள். அரண்மனைகள், கோயில்கள் கலை வளர்வதற்கேற்ற அரங்கினைக் கொடுத்திருக்கின்றன. மன்னர்கள் தமிழிலும் இசையிலும் ஆர்வமுள்ளவர்களாகவும், புலமை உள்ளவர்களாகவும் இருந்துள்ளார்கள். புலவர்களை ஆதரித்துப் போற்றியுள்ளார்கள். இதன் காரணமாக சிறந்த இலக்கியங்கள் தோற்றம்பெற்றுள்ளன.

இவற்றிற்கு ஆதாரமாக செகராசசேகர மன்னனின் காலத்து யாழ்ப்பாணத்து இசைமரபைப்பற்றி இக் கட்டுரையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இவ் ஆய்வு, நூல்களை மூலமாகக் கொண்டு விவரண ஆய்வுமுறை மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ் மன்னர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் செழிப்பான இசைமரபு ஒன்று இருந்திருக்கிறது என்கின்ற கருதுகோள் முன்வைக்கப்படுகின்றது.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த சிங்கையாரியன் என அழைக்கப்பட்ட ஆரியச்சக்கரவர்த்திகளின் இராசதானி யாழ்ப்பாணம் என அழைக்கப்பட்டது. இவ் இராசதானியின் பெயர் பின்னர் யாழ்ப்பாணப்பட்டினம், யாழ்ப்பாணாயன் பட்டினம், யாழ்ப்பாண தேசம் எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டது. இறுதியாகப் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் வடமாகாணத்தில் ஒரு நிர்வாக மாவட்டத்திற்குரிய பெயரைக் குறிப்பதாவும் அதன் தலைநகரைக் குறிப்பதாகவும் யாழ்ப்பாணம் என்ற பெயர் அமைந்தது. இதனைப் பின்வரும் குறிப்புக்கள் உறுதிப்படுத்துகின்றன.

"ஆரியச் சக்கரவர்த்திகள் நல்லூரில் இராசதானியை அமைத்திருந்தனர் என்று கைலாய மாலை முதலிய நூல்கள் குறிப்பிடும்.அவர்களைச் சிங்கையாதிபன், சிங்கையாரியன், சிங்கைகாவலன் எனவும் குறிப்பிடுவது வழக்கம். சமகாலச் சிங்கள நூல்கள் ஆரியச்சக்கரவர்த்திகளின் இராசதானியை யாப்பாபட்டுன என்று குறிப்பிடுகின்றன. அது யாழ்ப்பாணப் பட்டினம் என்பதன் சிங்கள வடிவமாகும். விஜயநகரப் பிரதானியான லக்கண்ண தண்ட நாயகனின் படையெடுப்பொன்றினைப் பற்றிக் குறிப்பிடும் திருமாணிக்குழிக் கல்வெட்டிலே யாழ்ப்பாணாயன் பட்டினம் என்னும் இராசதானி குறிப்பிடப்படுகிறது. பிற்காலத்துத் தென்னிந்திய சாசனங்கள் வட இலங்கையிலுள்ள தமிழிராச்சியத்தை யாழ்ப்பாணம் என்றும் யாழ்ப்பாண தேசம் என்றும் குறிப்பிடுகின்றன.

யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றி அதனை ஆட்சி புரிந்த போர்த்துக்கேயரும் (1619- 1658) ஒல்லாந்தரும் (1658 -1796) யாழ்ப்பாணப் பட்டினம் என்ற பெயரைத் தங்கள் ஒலியமைதிகளுக்கேற்ப சிறிதளவான மாற்றத்துடன் பயன்படுத்தினார்கள். பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் வட மாகாணம் என்ற அமைப்பில் யாழ்ப்பாண இராச்சியத்தின் பகுதிகள் அடங்கிவிட்டன. இராச்சியம் பற்றிய நினைவுகள் குடியானவர்களிடையே மறையத் தொடங்கி விட்டன. புதிய நிர்வாக முறையில் யாழ்ப்பாணம் என்ற பெயர் ஒரு நிர்வாக மாவட்டத்தின் பெயராகவும் அதன் தலைநகரின் பெயராகவும் அமைந்துவிட்டது. யாழ்ப்பாண நகரின் உற்பத்தி மிகவும் புராதனமானது என்பதை இப்பொழுது கோட்டைப் பகுதியில் நடைபெறுகின்ற அகழ்வுகளின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது"[1]

இலங்கையில் பௌத்த மன்னரும் இந்து மன்னரும் ஒருங்கே ஆதரித்து நாடு முழுவதிலும் செல்வாக்கு பெற்றிருந்த இந்து மதம் போர்த்துக்கீசர் வருகையினால் பெரிதும் பாதிக்கப்பட்டது. பௌத்தப் பொதுமக்கள் பௌத்தத்துடன் இந்து மத வழிபாட்டு அம்சங்களையும் ஏற்றிருந்ததுடன் சிங்களப் பிரதேசங்களில் இருந்த ஆலயங்களின் வழிபாட்டு முறைகளில் பிராமணர்களையும், இசையையும், திருமுறைகளையும், வாத்தியக் கருவிகளையும் ஏற்றிருந்தனர்.

"ஜயவர்த்தனபுரம் எனப்பட்ட கோட்டைத் தலைநகரின் வெளியே அனுராதபுரத்திலிருந்த காவற்தெய்வத்தின் கோயிலைப் போன்று, ஓர் ஈஸ்வரன் கோயில் அமைந்திருந்தது. அங்கு வாத்தியங்கள் இசைக்கத் தமிழ் மொழியிலே தேவாரங்கள் பாடப்பட்டன என சிங்கள நூலாகிய ஸலலிஹினி சந்தேச கூறும்."[2]

ஆகவே, தமிழர் பிரதேசங்களில் சைவசமய வளர்ச்சிக்கோ இசை சார்ந்த வளர்ச்சிக்கோ தடைகள் இருந்திருக்காது என்பது இச்செய்தி மூலம் புலனாகின்றது. குறிப்பாகப் பொலநறுவையின் வீழ்ச்சிக்குப் பின் தமிழ்ப் பிரதேசத்தில் ஒன்றாக விளங்கிய யாழ்ப்பாணத்தில் இந்து மன்னர்களும் சிற்றரசர்களும் ஆட்சி நடத்திய காரணத்தினால் இந்துமதத்தின் செல்வாக்கு மிளிர்ந்தது. தமிழ் மன்னர்கள் அரசவையிலே புலவர்களையும் கவிஞர்களையும் ஆதரித்ததன் காரணமாகப் பல இலக்கியங்கள், பத்திரிகைகள் தோற்றம் பெற்றன.

**தமிழ் மன்னர்கள் ஆகிய ஆரியச்சக்கரவர்த்திகள்**

1284ஆம் ஆண்டளவில் இலங்கை மீது போர் தொடுத்த பாண்டிய மன்னனின் சேனைத்தலைவனாகிய ஆரியச்சக்கரவர்த்தி, யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிஅங்கு தனி அரசையமைத்தான். அவனுக்கு பின் யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர் அனைவரும் ஆரியச்சக்கரவர்த்தி என்னும் பட்டப் பெயர் சூடி, யாழ்ப்பாணப் பட்டினம் எனவும் யாழ்ப்பாண தேசம் எனவும் வழங்கிய தமிழ் இராச்சியத்தை ஏறக்குறைய 400 ஆண்டுகளாக ஆட்சி புரிந்தனர். யாழ்ப்பாண வைபவமாலை என்னும் நூலின்படி ஆரியச்சக்கரவர்த்தி என்னும் பெயரைக் கொண்டு பன்னிரு தமிழரசர்கள் யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரிந்திருக்கிறார்கள். இவர்கள் செகராசசேகரன், பரராசசேகரன் என்னும் சிறப்புப் பெயரை மாறி மாறிப் பெற்றனர். இவர்கள் சமயம், கல்வி, இலக்கியம், கலை ஆகியன மேன்மை பெறுவதற்குப் பல பணிகளைப் புரிந்தனர். மேற்கூறிய பன்னிரு தமிழ் மன்னர்களுள் செகராசசேகரன், பரராசசேகரன்ஆகிய இருவரையும் முக்கியமானவர்களாகக் கலையுலகம் கண்டு கொள்கின்றது. இவ்விரு மன்னர்களுடைய காலத்தில் இலக்கியம், கலை, பண்பாடு ஆகியன மிகச்சிறப்பாக வளர்ந்துள்ளது.

**செகராசசேகரன்**

செகராசசேகரனின் வித்துவத்திறமைபற்றிப் பலசெய்திகள் நூல்களில்காணப்படுகின்றன. தக்ஷிணகைலாச புராணத்திற்கு சிறப்புப்பாயிரம் எழுதிய யாழ்ப்பாணம் மகாவித்துவான் அரசகேசரி "கற்றவர் திலகன்" (கற்றறிந்த புலவருள் சிறந்தோன்) என்றும் "ஒப்பிலா முத்தமிழோர்ந்த செப்பருஞ் செகராசசேகரன்" (ஒப்பிட்டுக் கூறுவதற்கு இயலாத இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழின் சிறப்பினைத் தெளிவுறக் கற்றவன்) என்றும் சிறப்பித்துள்ளார்.[3] செகராசசேகரமாலையும் "முத்தமிழ்சேர் செகராச சேகர மன்" (இயலிசை நாடகமென்னும் முத்தமிழையும் உணர்ந்த செகராசசேகரவேந்தன்) என அவனைச் சிறப்பிக்கின்றது. [4]

இவர் யாழ்ப்பாணத்தை அரசாண்ட கனகசூரிய சிங்கையாரிய இராசாவின் இரண்டாங்குமாரர். இவரது தமையனார் பரராசசேகரன் ஊர்க் காரியங்களைக் கவனித்து வந்தார். ஆனால் இளையவராகிய செகராசசேகரன் இலக்கியம், கலை ஆகியவற்றில் ஈடுபாட்டுடன் விளங்கினார். இதன் காரணமாக, வட தென்னிந்திய இராச்சியங்களிற்குச் சென்று, புலவர் பலரோடு சம்ஸ்கிருத கிரந்தங்களையும் தமிழ் கிரந்தங்களையும் அழைப்பித்து நல்லூரிலே வித்துவ சபை ஒன்று ஸ்தாபித்தார். பின்னர் மதுரைக்குச் சென்று, புலவரைக் கொண்டு அரிய நூல்களை எழுதிவித்தார். புலவர்களுக்கு சன்மானம், பரிசுகள் கொடுத்ததடன் மட்டுமன்றி நூல்களை யாழ்ப்பாணம் எடுத்து வந்து புலமை விருத்திக்கு அருந் தொண்டாற்றினார்.

**யாழ்ப்பாண மன்னரின் தமிழ்ச்சங்கம்**

செகராசசேகரச் சக்கரவர்த்தி காலத்தில் பல புலவர்கள் அங்கத்துவம் வகிக்கும் தமிழ்ச் சங்கம் சார்ந்த அமைப்பு நடைமுறையில் இருந்துள்ளது. யாழ்ப்பாண ராச்சியத்தின் வரலாற்றைக் கூறும் மூல நூல்களில் ஒன்று கைலாயமாலை ஆகும். முத்துராசக்கவிராசர் கலிவெண்பாவில் இந்நூலைப் பாடியுள்ளார். கைலாய நாதர் கோயில் வரலாற்றுடன் யாழ்ப்பாண மன்னர்களின் வரலாறுகளும் இந்நூலில் சுருக்கிக் கூறப்பட்டுள்ளன.இதில் வருகின்ற 210ஆவது பாடலிலே யாழ்ப்பாண மன்னர் தமிழ்ச் சங்கம் அமைத்துக் கலை வளர்த்த செய்தியைக் காணக்கூடியதாக உள்ளது. அதில் கீழ்வரும் செய்யுளைக் காணலாம்.

> **“புங்கவனைப் போலப் புவிதிருத்தி யாண்டு வைத்த**
> **சங்கச் சமூகத் தமிழாழன்”**[5]

| | |
|---|---|
| வைத்த | தன்னால் நிறுவப்பட்ட |
| சங்கம் | தமிழ்ச் சங்கம் |
| சமூகம் | புலவர் கூட்டம் |
| தமிழாழன் | தமிழ்க் கலைகளைப் பரிபாலிக்கும் அறிவுடையவன் |

இதிலிருந்து யாழ்ப்பாண மன்னர் தமிழ்ச் சங்கம் ஒன்றினை உருவாக்கி தமிழையும் கலைகளையும் வளர்த்தனர் என்ற செய்தி புலப்படுகின்றது.

**தமிழ்ச்சங்கத்தை நிறுவியவர்**

செகராசசேகரமன்னனேதமிழ்ச்சங்கத்தைநிறுவியவர்என்றகுறிப்புசெகராசசேகரமாலை என்ற நூலில் காணப்படுகிறது.[6] இலங்கையிலும் இந்தியாவிலுமிருந்து தமிழ்ப் புலவர்களையும் பண்டிதர்களைபும் வரவழைத்துக் தமிழ்ச்சங்கமொன்று நிறுவி, புதிய நூல்கள் பலவற்றை இயற்றுவித்தான். இக்கழகம் இவன் பின் வந்த சிங்கை அரசர்களால் பரிபாலிக்கப்பட்டுவந்தது.

**யாழ்ப்பாண மன்னரின் நூலகம்**

யாழ்ப்பாண மன்னர்கள் தமது ஆட்சிக் காலத்தில் சரஸ்வதி மஹாலயம் எனும் நூலகத்தைத் தோற்றுவித்து தமிழையும் கலையையும் வளர்த்திருக்கிறார்கள்.

"யாழ்ப்பாணத்திலிருந்த சரஸ்வதி மகாலயத்தில் இல்லாத வடமொழி தென்மொழி நூல்களையெல்லாம் தமிழ்நாட்டினின்றும் வரவழைத்து வைத்தான். அனேக நூல்களைப் பண்டிதர்களைக் கொண்டு புதிதாக இயற்றுவித்தான்.அவர்க்குப் பரிசிலும் வழங்கினான்."[7]

**செகராசசேகர மன்னன் காலத்துப் புலவர்களும் நூல்களும்**

| புலவர் | நூல் | நூலின் பொருள் |
|---|---|---|
| தெரியவில்லை | செகராசசேகரம் | வைத்தியநூல் |
| சோமசன்மா | செகராசசேகரமாலை | சோதிடநூல் |
| செகராசசேகரன் | தக்ஷிணகைலாச புராணம் | கோணேஸ்வர ஆலயத் தல புராணம் |
| கவிராசர் | கோணேச சாசனம் | தலவரலாறு |
| சகவீரன் | கண்ணகி வழக்குரை காவியம் | சிலப்பதிகாரத்தைப் பற்றியது |
| கரைசைப்புலவர் | திருக்கரைசைப் புராணம் | சிவன் புகழ் |

**செகராசசேகரம்**

இந்நூல் ஒரு வைத்தியத்தைப் பற்றியநூலாக இருந்தாலும் பாடல்கள் சந்த அமைப்பைப் பெற்று விளங்குகின்றன.

எ-டு *1.*

**மணிதங்கு வரையு ளாதி**
**மன்னுயிர் படைத்த போது**
**பிணிதங்கு வகையு நோயின்**
**பேருடன் குணமுங் காட்டி**
**அணிதங்கு மருந்துங் காட்டு**
**மாயுரு வேதந் தன்னை**
**கணிதங்கு வகையால் வேதங்**
**கடந்தமா முனிவன் செய்தான்**[8]

இந்தப் பாடல் ஒரு வைத்தியத்தைப் பற்றிக் கூற எழுந்த பாடலாக இருந்தாலும், குறிப்பிட்ட ஒரு சந்த அமைப்பைப் பின்பற்றியிருப்பதைக் காணலாம்.

எ-டு 2.

**பாரிலுள்ள சூத்திரனாம் பாம்பு புத்திற்**
**பரிந்திருக்கு மிரையெடுக்கிற் பலவுந் தின்னு**
**மேருடனே தானாடிற் பத்மராக**
**மிலங்குமணி முடிபுனையு மிலங்கை வேந்தர்**
**சீரியபொன் றிறையளக்கச் செங்கோ லோச்சுஞ்**
**செகராச சேகரமன் சிங்கை மேவு**
**மாரியர்கோன் வெண்குடையி னிழலே செய்யு**
**மவனிதன்னைப் பார்த்துநின்றே அமர்ந் தாடும்மே9**

இந்தப் பாடல் பாம்புக் கடிக்குரிய வைத்தியத்தைப் பற்றிக் கூறுவது.இதன் சந்தம் ஒரு கும்மிப் பாட்டின் மெட்டில் அமைந்துள்ளதைக் காணலாம்.கும்மி வடிவம் குறத்தின் வளர்ச்சி நிலையாகும்.

**செகராசசேகரமாலை**

யாழ்ப்பாண அரசனான செகராசசேகரனால் இயற்றுவிக்கப்பட்ட சோதிடநூல் இதுவாகும்.இதில் காணப்படும் சில பாடல்கள் இசை பற்றிய செய்திகளைத் தரும் பாடல்களாகவும், பல பாடல்கள் இசைக்கக்கூடிய பாடல்களாகவும், உள்ளன.

**இசை பற்றிய செய்திகள் தரும் பாடல்கள்**

சகலகலாரம்பம் என்ற தலைப்பில் கீழ்வரும் பாடலில் இசைபற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

**‘சாற்றுகுரு கரம்பிண்டி தயங்கு சோதி**
**சௌமியன்பொன் வாராதி சத்த நூற்காந்**
**தோற்றியவா வணிநவ்வி பூசம் பெண்ணை**
**சுரேசனாள் போர்நாவா யுத்த ரங்கள்**
**வேற்றுமைசேர் நடனகலை யெவைக்கு மாகு**
**மிக்கபுதன் வாராதி விட்ட மத்தம்**
**மாற்றில்பனை கேட்டை குரு குன்று தோணி**
**வாத்தியகீ தந்தொடங்க மதிக்க லாமே.”10**

புநர்பூசம் பூசம் அத்தம் சுவாதி என்னும் நாட்களில் புத குரு வாரோதயாம்ச ராசிகளில் சப்தசாஸ்திரமும், பூசம் உத்தரம் அத்தம் அனுஷம் சேட்டை உத்தராடம் அவிட்டம் சதயம் உத்தரட்டாதி ரேவதி என்னும் நாட்களில் நடனசாஸ்திரங்களும், புதன் வாரோதயாம்சராசிகளில் பூசம் அத்தம் அனுசம் கேட்டை அவிட்டம் சதயம் ரேவதி எனும் நாட்களில் வாத்திய கீத சாஸ்திரங்களும் ஆரம்பிக்கலாம்.

மேற்குறிப்பிட்ட பாடலும் பொருளும் நடனக்கலையையும், வாத்தியமும் இசையும் இணைந்த இசைக் கலையையும் ஆரம்பிக்க உகந்த சிறந்த முகூர்த்த நாள், நட்சத்திரங்களைப் பற்றிக் கூறுகின்றது. இதனால் அந்தக் காலத்திலேயே அதாவது பதின்மூன்றாம் நூற்றாண்டிலேயே இசைக்கலை யாழ்ப்பாணத்திலே சிறப்பான நிலையில் இருந்திருக்கிறது என்பது தெளிவாகின்றது.

**சாரதா யோகம்.**

**நவ்வி நாற்பத மவற்றுண்மால் பெறுபத நயந்த**
**செவ்வி மாலவன் வாரம துறவதிற் றிருமால்**
**கௌவை தீர்மதி யுடனெழி லன்னது கல்விக்**
**கெவ்வ நீங்கிய சாரத யோகமா மென்னே.**[11]

அத்தத்துக்குரிய நான்கு பாதங்களுள் புதனம்சமாகிய மூன்றாம் பாதமும் புதவாரமும் கன்னிலக்கினமும் பொருந்த, அதில் புதன் சந்திரனுடன் கூடி நிற்கில் அம்முகூர்த்தம் சாரதாயோகமெனப்படும். இதில் ஆரம்பித்த வித்தை அதிக விருத்தியாகும்.

வித்தை என்பதற்குக் கருத்தாக கல்வி, ஞானம், தந்திரதொழில், மாசாலம் என்பவற்றை யாழ்ப்பாண அகராதி கூறுகின்றது.12 ஆகவே, எந்த ஒரு கற்றல் நடவடிக்கைகளும் முகூர்த்தம் பார்த்து ஆரம்பிக்கும் வழக்கமும், நம்பிக்கையும் ஆரம்பத்திலேயே மக்களிடையே நிலவியிருக்கின்றது என்பது புலனாகின்றது.

**இசைக்கக்கூடிய பாடல்கள்**

பாடல்கள் பெரும்பாலும் சந்தங்களின் அடிப்படையில் அமைந்திருக்கின்றன. எடுத்துக்காட்டாக, மேற்கூறப்பட்ட பாடல்களுள் ஒன்றைப் பார்க்கலாம்.

**சாரதா யோகம் என்ற தலைப்பிலுள்ள பாடல்**

| | | |
|---|---|---|
| நவ்விநாற்பதம்<br>தகிடதகதிமி | அவற்றண்மால்பெறு<br>தகடதகதிமி | பதநயந்த<br>தகதகதிமி |
| செவ்விமாலவன்<br>தகிடதகதிமி | வாரமதுறவ<br>தகிடதகதிமி | திற்றிருமால்<br>தககததிமி |

இப்பாடல் மேற்கண்டவாறு சந்த அமைப்பிலுள்ளது.

**சங்கீத நிருத்தாதிகள்**

அரசசபையிலே ஆற்றுகை செய்யப்படும் இசை, நடன நிகழ்வுகள் எப்பொழுது செய்விக்கப்பட வேண்டும் என்ற நியதி சொல்லப்பட்டிருக்கின்றது. இது பற்றிய பாடல் கீழ்வருமாறு :

உடைகுளம்பா வகன்கொடிறு சுளகு தோணி
யுருத்திரனா வணியடுப்புப் பயறிந் நாளிற்
புடைதருநற் றிதிகளில்வா ராதி யெல்லாம்
பொருந்தியநற் கோட்கள் பெற்ற ராசி தேள்கர்க்
கடகமரி மிதுனம்விற் றுலைமீன் வாய்ப்பக்
கலந்திடுசங் கீதமுடன் கவிஞர் சொற்ற
விடமுடைய நிருத்தாதி கன்ம மெல்லா
மிளங்கொடியா யிவைகூட வியற்று வாயே.[13]

பரணி, கார்த்திகை, திருவாதிரை, பூசம், சித்திரை, விசாகம், பூராடம், அவிட்டம், ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் வரும் நாட்களிலும், மிதுனம், கர்க்கடகம், சிங்கம், துலாம், விருச்சிகம், தனு, மீனம் என்னுமிராசிகளிலும் சங்கீதம், நிருத்தம் முதலியவை அரச சபையிலே ஆற்றுகை செய்ய உகந்தவை என இப்பாடல் கூறுகின்றது.

**மன்னன் சிறந்த முத்தமிழ் அறிவுள்ளவர்**


சித்தமுறு தினமாதி தீதெனினுந்
திரிகூடஞ் சிதைவுற் றாலுஞ்
சுத்தவிரு வோரோரைக் கதிபதியோர்
கிரகமாத் தோன்றி லான்ற
முத்தமிழ்சேர் செகராச சேகரமன்
றிருமார்பின் முந்நூ லென்ன
மெத்துமியன் மயிலனையார் பைங்கழுத்தின்
மாங்கலநாண் விளங்கு மின்னே.[14]

திருமணப் பொருத்தங்களைப் பற்றி இப்பாடல் கூறுகிறது.எவ்வாறான பொருத்தம் இருந்தால் பெண்களின் தாலி நிலைத்திருக்கும் என்பதை இப்பாடல் அழகாக விளக்குகின்றது. அதாவது இயலிசை நாடகமென்னும் **முத்தமிழையுமுணர்ந்த** செகராசசேகரவேந்தனது மார்பில் தரித்திருக்கும் பூணூல் போல பெண்களது கழுத்தில் திருமாங்கலியம் என்கின்ற தாலி நீண்டகாலம் நிலைத்திருக்கும்.

இப்பாடல் மூலம் மன்னன் செகராசசேகரன் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழிலும் சிறந்த அறிவுள்ளவனாக விளங்கியமை புலனாகின்றது.

**தக்ஷிணகைலாச புராணம்**

தக்ஷிணகைலாச புராணம் செகராசசேகரமன்னனாலே இயற்றப்பட்டது என்பதும், தக்ஷிணகைலாச புராணத்திற்கு நூலாசிரியராலே கொடுக்கப்பட்ட பெயர் "கைலாச புராணம்" என்பதும் தக்ஷிணகைலாச புராணம்- பகுதி 1 இலுள்ள வெளியீட்டுரையின் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. இந்நூலில் இசை பற்றிய பல செய்திகள் காணப்படுகின்றன.



**இசையோடு ஒன்றிய மக்கள்**

1. வயலும் வயல் சேர்ந்த நிலமும் மருதம் என்று சொல்லப்படுகின்றது. இந்த வயல் நிலங்களில் உழவர்கள் சேர்ந்து தொழில் செய்யும் போது இசைக்கருவிகள் வாசிக்கின்றார்கள். வயலாகிய அரங்கிற்கு அவர்களது மனைவிமாராகிய உழத்தியப் பெண்களும் செல்கின்றார்கள். (ஈழமண்டலச் சருக்கம்-பாடல் இல.11)

2. மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி என்று சொல்லப்படும். இவ்விடத்தில் நாகபாம்பின் நாகரத்தினத்தினால் தெறிக்கும் வெளிச்சம் விளக்காகவும், அவ் ஒளியில் தன் தோகையை விரித்து ஆடும் மயில் நடனக் கலைஞராகவும், இசையை எழுப்பிக்கொண்டிருக்கும் வண்டு அந்த நடனத்திற்குரிய பாட்டுக் கலைஞனாகவும் உருவகித்து மிக அழகாகக் கற்பனை வளத்தடன் கூறப்பட்டுள்ளது. அத்துடன் நாகமும் மயிலும் பகையை மறந்து இன்புறுவதனைப் புலவர் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளதும் மிக அழகாக உள்ளது. (ஈழமண்டலச் சருக்கம்-பாடல் இல.21)

3. காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனப்படும். இந்நிலத்தில் இடையரும் இடைய மகளிரும் எவ்வாறு இசையோடு சேர்ந்த வாழ்வு வாழ்கிறார்கள் என்பது கூறப்பட்டுள்ளது. (ஈழமண்டலச் சருக்கம்-பாடல் இல.22)

இதைப் போன்று சில கருத்துகள் கீழ்வரும் அட்டவணை மூலம் சுருக்கமாகத் தரப்படுகிறது.

| பா. இல | இசைக் குறிப்புகள் | | இசைக் கருவிகள் | செய்தி |
|---|---|---|---|---|
| *11* | வயல் நிலம் | அரங்கு | மருதப் பறை தண் ணுமை | வயலாகிய அரங்கில் உழவர்கள் நிகழ்த்திய ஆற்றுகையைப் பார்க்க உழவரின் மனைவிகளும் சென்றார்கள் |
| | உழவர் | இசைக் கலைஞர்கள் | | |
| *22* | மூங்கில் | குழல் | பறை குழல் | முல்லைப் பண்ணுடன், இடைய மகளிரின் தயிர் கடையும் ஒலியும், பறை இசையின் ஒலியும் சேர்ந்தது |
| | இடையர் | இசைக் கலைஞர்கள் | | |
| *24* | வீணை இசை<br>தோற் கருவிகளின் இசை<br>இசை ஒலி<br>அந்தணரின் மறை ஒலி<br>இவைகள் சேர்ந்து ஓங்கார ஒலியைத் தோற்றுவிக்கின்றது | | வீணை | இசை மரபு பிறழாத இசை ஒலியானது உலகில் ஓங்கார ஓசையைப் பிறப்பிக்கின்றது |
| *39* | தவம் செய்வோரின் ஒலி | சம்வர்த்தம் | சிறு பறை தாளம் | இப்பாடலில் கூறப்பட்டுள்ள இவ் ஏழு ஒலிகளும் சேர்ந்துகயிலை யெங்கும் இறைவனைப் போற்றும் பேரொலியாகக் கேட்டது. இது சம்வர்த்தம் முதலான ஏழு கடலும் இணைந்து இறைவனைத் துதித்தது போல் இருந்தது. |
| | முனிவரின் ஒலி | ஆவர்த்தம் | | |
| | சான்றோரின் ஒலி | புட்கலா வர்த்தம் | | |
| | தேவரின் ஒலி | சங்காரிதம் | | |
| | சிறுபறையின் ஒலி | துரோணம் | | |
| | தாளத்தின் ஒலி | காளமுகி | | |
| | வலம்புரிச் சங்கு | நீலவருணம் | | |

**இசைப்படுத்தக் கூடிய பாடல்கள்**

இப்புராணம் ஆகிய தக்ஷிணகைலாச புராணத்தில் வரும் பாடல்கள் பெரும்பாலும் இசைத்தன்மை பொருந்தியவைகளாக உள்ளன.குறிப்பாகத் தேவாரங்களின் இசையமைப்பைப் பெற்றனவாகக் காணப்படுகின்றன.இப்புராணம் திருகோணமலையில் எழுந்தருளியிருக்கின்ற சிவனையும் அவ் ஊரையும் பற்றியது.

ஏற்கனவே நாயன்மார்களால் பாடப்பெற்ற தலங்களில் ஒன்று இவ்வாலயம் ஆகும். ஈழத்திலுள்ள தலங்களுள் திருக்கோணேஸ்வரத்தைப்பற்றித் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், திருக்கேதீஸ்வரத்தைப்பற்றித் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்,

சுந்தரமூர்த்தி நாயனார் இருவரும் பாடல்கள் பாடியுள்ளனர். கீழ்வரும் எடுத்துக்காட்டுக்கள் தக்ஷிணகைலாச புராணத்தின் நூலாசிரியர் திருமுறைகளில் மிகுந்த ஈடுபாடு உடையவர் என்பதைக் காட்டுகின்றது.

எ-டு *1.* திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்

**'விருது குன்றமா மேருவில் நாணரை**
**வாவனல் எரிஅம்பாப்**
**பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்**
**றுறைபதி யெந்நாளும்**
**கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்**
**பொழிலணி மாதோட்டம்**
**கருத நின்றகே தீச்சரங் கைதொழக்**
**கடுவினை யடையாவே."[15]**

இத் தேவாரம் பண் நட்டபாடையில் மிஸ்ரசாபு தாளத்தில் பாடப்படுவது மரபு.

இதைப் பின்பற்றியதாகக் கருதக் கூடியதாகத் தக்ஷிணகைலாச புராணத்தில் வரும் பாடல் கீழ்வருமாறு அமைந்துள்ளது.

**"விருது கூறிய நின்வலி**
**என்வலி விரைவில்**
**பொருது காண்குதும் என்றலும்**
**உரகனும் புகைந்து**
**வருதி என்றனன் இருவரும்**
**இறைவனை வணங்கித்**
**தருதி போர்எனப் போர்க்கிடம்**
**கொடுத்தனன் தலைவன்."[16]**

இப்பாடல் பண் நட்டராகத்தில் பாடுவதற்கு ஏற்ற அமைப்பிலுள்ளது. தாள அமைப்பைப் பார்த்தால், மிஸ்ரசாபு தாளத்திற்குப் பொருத்தமாகவும் ஒரு தகிட அதிகமாக வருவதையும் காணலாம்.அதனைப் பின்வரும் அட்டவணை மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| விருது<br>தகிட | கூறிய<br>தகதிமி | நின்வலி<br>தகிட |
| என்வலி<br>தகிட | விரைவில்<br>தகதிமி | - |
| பொருது<br>தகிட | காண்குதும்<br>தகதிமி | என்றலும்<br>தகிட |
| உரகனும்<br>தகிட | புகைந்து<br>தகதிமி | - |

இப்பாடல் மேற்காட்டப்பட்டுள்ள தேவாரத்தின் அமைப்பைப் பெற்றுள்ளதுடன், இன்னும் ஒருபடி மேல் சென்று அருணகிரிநாதரின் திருப்புகழ் சந்தத்தையும் பிரதிபலிப்பதாக உள்ளது.

**அருணகிரிநாதர் திருப்புகழ்**

திருக்கோணேஸ்வர இறைவன் மேல் அருணகிரிநாதர் கீழே குறிப்பிட்டுள்ள திருப்புகழைப் பாடியுள்ளார். அதன் தொடக்கமும் அதற்குரிய சந்தமும் வருமாறு.

**தனத்த தானன தனத்தான தானன**
**தனத்த தானன தனத்தான தானன**
**தனத்த தானன தனத்தான தானன தனதான**

விலைக்கு மேனியி லணிக்கோவை மேகலை

தரித்த வாடைய மணிப்பூணு மாகவே

மினுக்கு மாதர்க ளிடைக்காம மூழ்கியே மயலூறி17

மேற்கூறிய மூன்று நூல்களைப் போல செகராசசேகரன் காலத்து மற்றைய நூல்களான கோணேசர் கல்வெட்டென வழங்கும் கோணேசர் சாசனமும், சிலப்பதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட கண்ணகி வழக்குரை காதையும், சிவன் புகழைக் கூறும் திருக்கரைசைப் புராணமும் சிறந்த இசைத்தன்மை பொருந்தியனவாக உள்ளன.

**முடிவுரை**

மேற்கூறியவற்றை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது செகராசசேகர மன்னனின் காலத்து யாழ்ப்பாணத்து இசையைப் பற்றிப் பின்வரும் முடிவுகளைப் பெறலாம்

1. இசை நல்நிலையில் சந்த அமைப்புடன் இருந்திருக்கின்றது.
2. கும்மி போன்ற இசைப்பாடல்கள் வழக்கில் இருந்திருக்கின்றது.
3. திஸ்ர,சதுஸ்ர,கண்ட,மிஸ்ரம் ஆகிய தாள நடைகள் பாடல்களில் பயின்றுள்ளது.
4. மக்களும், மன்னனும் சோதிடத்தில் மிகுந்த நம்பிக்கை உள்ளவர்களாகக் காணப்பட்டார்கள்.
5. இசை, நடனம் போன்ற கலைகளும் வித்தைகளும் ஆரம்பிக்கும் போது நல்ல நேரம், நல்ல நாள் (முகூர்த்தம்) பார்க்கப்பட்டிருக்கின்றது.
6. அரச சபையிலே இசை, நடன நிகழ்வுகள் நல்ல முகூர்த்தத்தில் நடைபெற்றிருக்கின்றது.
7. எல்லாவற்றிற்கும் மேலாக, மன்னர் சிறந்த முத்தமிழ் அறிவுடையவர்களாக இருந்திருக்கிறார்கள்.

8. மன்னனும் மக்களும் இசையறிவுடன் விளங்கியது மட்டுமன்றி, இசையைப் போற்றி வளர்த்திருக்கிறார்கள்.

9. மக்கள் வாழ்க்கையோடு இசை இயல்பாகவே இணைந்துள்ளது.

10. இக்காலத்தில் எழுந்த பாடல்கள் இசைத்தன்மை பொருந்தியனவாக உள்ளன.

11. இதன் காரணமாக பாடல்களை இயற்றியவர்களும் மக்களும் சிறந்த இசை அறிவுள்ளவர்களாக இருந்துள்ளார்கள் என்பதை ஊகிக்க முடிகின்றது.

12. அக்காலத்து சமூகம் சோதிடம், மருத்துவம், இசை, வரலாறு, ஆன்மீகம் ஆகியவற்றில் மிகுந்த ஆர்வம் கொண்ட பண்புடன் வாழ்ந்துள்ளார்கள்.

அடிக்குறிப்புகள் :

1. பத்மநாதன், சி.(2011) யாழ்ப்பாண இராச்சியம் ஒரு சுருக்க வரலாறு.கொழும்பு,குமரன் புத்தக இல்லம். ப.16
2. இந்திரபாலா, கா.(1978) ஆதி இலங்கையில் இந்துமதம். சுன்னாகம், திருமகள் அச்சகம்.ப.9
3. பத்மநாதன், சி.(1995) தக்ஷிணகைலாசபுராணம். கொழும்பு, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.ப.5
4. இரகுநாதையர், இ,சி.(1942) செகராசசேகரமாலை. யாழ்ப்பாணம், சோதிடப் பிரகாசயந்திரசாலை. ப.62
5. நடராசன்,பி.(1983) கைலாயமாலை. யாழ்ப்பாணம், செட்டியார் அச்சகம். ப.32
6. இரகுநாதையர், இ,சி.(1942) செகராசசேகரமாலை. யாழ்ப்பாணம், சோதிடப் பிரகாசயந்திரசாலை. ப.ஓஐஏ டீ
7. முத்துத்தம்பிப்பிள்ளை, ஆ.(1915) யாழ்ப்பாணச் சரித்திரம். யாழ்ப்பாணம், நாவலர் பதிப்பகம்.ப.46.
8. பொன்னையாபிள்ளை, ஐ.(2000) செகராசசேகர வைத்தியம். சுதேச மருத்துவத் திணைக்களம்.ப.1
9. சதாசிவம்,ஆ.(1966) ஈழத்துத் தமிழ்க்கவிதைக் களஞ்சியம். கொழும்பு, சாகித்திய மண்டலம்.ப.20
10. இரகுநாதையர், இ,சி.(1942) செகராசசேகரமாலை. யாழ்ப்பாணம், சோதிடப் பிரகாசயந்திரசாலை. ப.35
11. மேலது,ப.35
12. சந்திரசேகரப்பண்டிதர்., சரவணமுத்துப்பிள்ளை. (2014) யாழ்ப்பாண அகராதி-2. சென்னை, தமிழ்மண் பதிப்பகம். ப.447
13. இரகுநாதையர், இ,சி.(1942) செகராசசேகரமாலை. யாழ்ப்பாணம், சோதிடப் பிரகாசயந்திரசாலை. ப.99
14. மேலது,ப.62
15. பொன்னையா,நா.(1934) ஈழமண்டலத் திருத்தல தேவாரமும் திருப்புகழும். சுன்னாகம்,திருமகள் அழுத்தகம்.ப.5
16. பத்மநாதன்,சி.(1995 தக்ஷிணகைலாச புராணம். பகுதி 1.கொழும்பு, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம். ப.78.
17. பொன்னையா, நா.(1934) ஈழமண்டலத் திருத்தல தேவாரமும் திருப்புகழும். சுன்னாகம், திருமகள் அழுத்தகம்.ப.13